**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 111/2021**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 01.04.2026 | | |
| பெயர்: | சரிதா<br>(PW1– Chief.con ) | கணவர் பெயர்: | ரத்தினகுமார் |
| கிராமம்: | திருமேனிகூடம், நாங்கூர் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 45/2026 |

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி : 01.04.2026</u>**

1. தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதி தாக்கல் செய்த நிறைவேற்று மனு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகவும்,

2. கடந்த 08.05.2021 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்,

3. கடந்த 31.05.2021 தேதியிட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகவும்,

4. கடந்த 29.12.1998 தேதியிட்ட செந்தமிழ்செல்விக்கு, கணேசமூர்த்தி எழுதி கொடுத்த கிரய ஒப்பந்த பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகவும்,

5. கடந்த 19.11.2020 தேதியிட்ட மக்கள் நீதிமன்ற தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகவும்,

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.